சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:– முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

அமர்வு வழக்கு எண் 129/2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 13 | நாள் | 19.9.2025 |
| பெயர் | டாக்டர் சவிதா | தொழில் | மருத்துவர் |
| தந்தை பெயர் | அரிக்கிருஷ்ணன் | கிராமம் | |
| தாலுக்கா | பாண்டிச்சேரி | வயது | 36 |

(குற்றம் சாட்டப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தற்போது விழுப்புரம் மாவட்டம் சிறுவந்தாடு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில மருத்துவராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 2018ல் மயிலாடுதுறை அரசு பெரியார் மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது 09.04.2018 அன்று காலை 11.30 மணியளவில் மயிலாடுதுறை ரயில்வே காவல் நிலைய உதவி ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தில் மயிலாடுதுறை இருப்பு பாதை காவல் நிலைய குற்ற எண். 27/2018, ச/பி. 174 குவிமுச வழக்கில் சம்பந்தப்பட்ட இரயிலில் அடிபட்டு இறந்துபோன பரிதா, க/பெ. மகாலிங்கம், 36 வயது, என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய கேட்டு 447 பெண்காவலர் கார்த்திவேணி என்பவர் அடையாளம் காட்ட பிரேத பரிசோதனை 11.30 மணியளவில் தொடங்கப்பட்டது. உடல் முழுவதும் நொறுங்கிய நிலையில் பிணேமேடையில் வைக்கப்பட்டிருந்தது. தலை நொறுங்கியிருந்தது. வயிறு மற்றும் மார்பக பகுதி நொறுங்கியிருந்தது. இரண்டு கால்களும் முட்டிக்கு கீழ் நொறுங்கியிருந்தது. பிரேத பரிசோதனை பகல் 12.30 மணியளவில் முடிந்தது.

**இறப்பிற்கான காரணம்**

Crush injuries in multiple organs (உடலில் பல்வேறு உறுப்புகளில் ஏற்பட்ட காயங்களால் இரத்தப்போக்கு ஏற்பட்டு இறந்துள்ளார் என்று சான்றளித்துள்ளேன். அந்த **பிரேத பரிசோதனை சான்று அசாஆ 3** ஆகும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

காவல் ஆய்வாளர் என்னை ஒரு முறைதான் விசாரித்து வாக்குமூலம் பெற்றார். பிரேத பரிசோதனைக்கான வேண்டுகோள் கடிதத்துடன் வேறு எந்த ஆவணமும் எனக்கு அனுப்பிவைக்கவில்லை.

Dr. A. Smithe

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை